MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

# தொல்காப்பியரின் தொலைநோக்கு பார்வை

முனைவர் ரா.விஷ்ணு பிரியா,
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,(தன்னாட்சி)சிவகாசி
DOI 10.5281/zenodo.17093759.

**Abstract :**

The first and foremost grammar book found in Tamil during the Sangam period is the Tolkappiyar's Tolkappiya Grammar. This book not only explains the grammar of Tamil but also explains the lifestyle of Tamils to the world. S.V. Subramanian states that Tolkappiyam should be understood as "Tolkappiyam should be understood as "Tolk + Kapu + Iyam". It means preserving the ancient and preserving the ancient"1. In this way, this research article will guide us about the far-sighted thoughts in the Tolkappiyar's materialism.

**Key Words :** Tholkapiyam - Materialism - Sangam Periods - Grammar

சங்க காலத்தில் தமிழில் கிடைத்த இலக்கணங்களில் முதன்மையானதாகவும், முதலாவதாகவும் எண்ணப்படுவது தொல்காப்பியரின் தொல்காப்பிய இலக்கண நூலாகும்.இந்நூல் தமிழின் இலக்கணத்தை இயம்புவதோடு தமிழரின் வாழ்க்கை முறையையும் உலகிற்கு எடுத்துரைக்கிறது. தொல்காப்பியத்தை **பற்றி “தொல் + காப்பு + இயம் என்று பிரித்து பொருள் கொள்ள வேண்டும். பழமையை தொன்மையை காத்து இயம்புவது”**[1] என்று ச.வே சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். இவ்வகையில் தொல்காப்பிய பொருளதிகாரத்தில் உள்ள தொலை நோக்கச் சிந்தனைகள் பற்றி இவ்வாய்வு கட்டுரை வழி காண்போம்.

## தொலைநோக்கு

தொலைநோக்குச் சிந்தனைகள் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காலகட்டத்தில் இலக்கியங்களாகவும், இலக்கணங்களாகவும் இன்னும் பிற வடிவிலும் வெளிப்படுகின்றன. இவை உலக எல்லையைத் தன் வட்டமாகக் கொண்டவை. எண்ணங்களும் அதன் வழிச் சிந்தனைகளும் சமூகத்திற்குச் சமூகம், இனத்திற்கு இனம், நாட்டிற்கு நாடு மாறுபடுகின்றன. இவ்வெல்லைகளைக் கடந்து எல்லோருக்கும் உகந்ததாக அமைவது “தொலைநோக்கு“ என்ற எல்லைக்குள் வருகின்றன. தொல்காப்பியம்


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

இலக்கணம் என்பதையும் தாண்டி வாழ்வியல் அறிவியல் போன்ற பல தொலைநோக்குப் பார்வையுடன் காணலாம்.

**பண்புகள்**

இல்லறநெறியில் அறம், பொருள், இன்பம் போன்றவற்றில் வழுவாமல் எல்லோராலும் போற்றும் படி வாழ்வதற்கு தலை மக்களிடையே இருக்க வேண்டிய பண்புகள் என்று தொல்காப்பியர்,

**"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு**
**உருவு நிறுத்த காம வாயில் நிறைய அருளே**
**உணர்வோடு திருஎன முறையுறக் கிளந்த**
**ஒப்பினது வகையே"[2] (தொல்.நூற்.1219)**

தோன்றிய குடிநிலை, குடிக்குத் தக ஒழுக்கம், வினை ஆளும் தன்மை, வயது, வடிவம் நிலைத்தக் காதல், மன அடக்கம், பரிவுணர்வு, அறிவு, செல்வம் இவை தலைவன்,தலைவிக்கு மட்டுமல்ல உலக மாந்தர் அனைவருக்கும் அமைய வேண்டிய பண்புகள் என்று தமிழின வாழ்க்கையையும், தொலைநோக்குச் சிந்தனையையும் அறிய முடிகிறது.

உயிர்களின் இன்பம்

மனதின் தன்மையை பொறுத்தே இன்பத்தின் தன்மையும் அமையும். இது மனித உயிர்க்கு மட்டுமல்லாது எல்லா உயிர்க்கும் பொருந்தும் என்ற தொலைநோக்கு பார்வையுடன் இதனை,

**"எல்லா வுயிர்க்கும் இன்பம் மென்பது**
**தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"[3] (தொல்.நூற்.1169)**

என்ற நுற்பா வழி உணர்த்துகிறார்.

திணைப்பாகுபாடு

தொல்காப்பியத்தில் தொல்காப்பியர் திணைப்பாகுப்பாட்டை உலக நிலத்தன்மைகள் அனைத்தையும் மனதில் கொண்டு பிரித்துள்ளமையை அறிய முடிகிறது.

**"அவற்றுள்**
**நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**படுதிரை வையம் பாத்திய பண்பே" [4](தொல் நூற்.948)**

என்று இந்நூற்பாவில் தமிழ் மண் என்று குறிப்பிடாமல் வையம் என்று உலகத்தை குறிக்கிறார். உலக நாடுகள் பற்றிய வரலாற்றெல்லாம் நிலத்தின் அடிப்படையைச் சார்ந்தவையாகும். "உலகமே முப்பொருளில் தான் உள்ளது. அம்முப்பொருளும் முதல், உரி, கருப்பொருள்கள்" என்று ச.வே.சுப்பிரமணியன் கூறியுள்ளார். இதனை தொல்காப்பியர்,

**"முதல் எனப்படுவது நிலம்பொழுது திரண்டின்**
**இயல்பென மொழிப இயல்பு உணர்ந்தோரே"[5]**

**(தொல். நூற் 950)**

என்கிறார்.

**இயற்கை வளம்**

தொல்காப்பியர் கருப்பொருளில் இயற்கை வளங்களான விலங்குகள், மரம், செடிகள், கொடிகள், பறவை, நீர் என்று சுட்டுகிறார். இவை தொல்காப்பியரின் உயிரியல் அறிவை வெளிப்படுத்துகின்றன. இவ்வகையான இயற்கை வளங்களை பேணி வளர்ப்பது இன்றைய முதன்மை தேவை. இதனைப் பற்றி பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே சிந்தித்தவர் தொல்காப்பியர்.

**அறிவியல் சிந்தனை**

தொல்காப்பியம் இலக்கணம் என்ற அடையாளத்துக்கு மேல் அறிவியல் சிந்தனையையும் கூறியுள்ளது. மனிதன் ஆறறிவு கொண்டவன் என்பதை 3000 ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் வெளிப்படுத்தியுள்ளார்.

**"மக்கள் தாமே ஆறறி வுயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"[6]**

**(தொல்.நூற்.577)**

என்பதை அறிய முடிகிறது. மனிதர்களைப் போலவே ஆறறிவு கொண்ட விலங்குகளும் சில உண்டு என்பதை,

**"ஒரு சார் விலங்கும் உளவென மொழிப"[7] (தொல்.நூற்.578)**

என்று உடம்பில் மட்டும் அறிவன ஓர் அறிவு உயிர்கள், உடம்பாலும் நாவலும் அறிவன இரண்டு அறிவுயிர்கள், உடம்பு, நா, மூக்கு மூன்றாலும் அறிவன


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

மூவறிவுயிர்கள் இவை மூன்றோடு கண்ணாலும் அறிபவை நான்கறி உயிர்கள், இந்நான்கோடு காதோடு அறிபவை ஐந்தறிவுயிர்கள் என்று உலக உயிர்கள் யாவற்றையும் அடக்கும் தொலை நோக்குத் தன்மையை அறிய முடிகிறது.

**மெய்ப்பாடு**

உடலிலும் உள்ளத்திலும் ஏற்படும் நிகழ்ச்சிகளைப் பற்றி மெய்ப்பாட்டியல் கூறுகிறது. மெய்ப்பாடுகள் எட்டு என்று நகை, அவலம், இழிவு, வியப்பு, பயம் , பெருமிதம், சினம், மகிழ்ச்சி என்று தொல்காப்பியர்,

> **”நகையே அழுகை இளிவரல் மருட்கை**
> **அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
> **அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப“ [8](தொல்.நூற்.1197)**

விளக்குகிறார். இவை அனைத்தும் உலக மாந்தர்க்கு பொதுவாக அமையக் கூடியது என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

**தொகுப்புரை**

இவ்வாறு தொல்காப்பியம் வாழ்க்கையின் இலக்கணத்தை தொலைநோக்கோடு சிந்திருப்பதோடு அவற்றை உலகுக்கும் உலக மக்களுக்கும் பொருந்தக் கூடிய வகையில் தொலைநோக்கு தன்மையில் எடுத்துரைத்துள்ளதை இதன் வழி அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. தொல்காப்பிய தெளிவுரை,ச.வே. சுப்பிரமணியன், சென்னை பக். 47.
2. தொல்காப்பியம்,பொருளதிகாரம், நச்சினார்கினியர், சென்னை. பக். 28.
3. மேலது பக்.35.
4. மேலது பக்.41.
5. மேலது பக்.43.
6. மேலது பக்.47.
7. மேலது பக்.46.
8. மேலது பக்.42.


http://Creativecommons.org//license/by/4.0/.